# இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை-34.

பெறுநர்

தலைமை தணிக்கை அலுவலர்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை-34.

சுற்றறிக்கை ந.க.எண்.31154/2010/எம்.3/ நாள் 06.10.2021

அய்யா,

பொருள்: அறநிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கு கேட்பு, வசூல், நிலுவை விவரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்தல் மற்றும் கணினியில் ரசீது வழங்கும் முறை குறித்து தணிக்கை மேற்கொண்டு அறிக்கை அளிக்க கோருதல் - தொடர்பாக.

பார்வை:
1) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.31154/10/ எம்.3/ நாள.07.08.2021
2) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.31154/10/ எம்.3/ நாள் 19.08.2021
3) இவ்வலுவலக ந.க.எண்.31154/10/ எம்.3/ நாள் 19.08.2021
4) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.31154/10/ எம்.3/ நாள் 31.08.2021. 15.09.2021. 30.09.2021
5) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.31154/10/ எம்.3/ நாள் 06.10.2021

*********

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள் தொடர்பாக அந்தந்த அறநிறுவனங்களில் பேணப்படும் கேட்பு வசூல் நிலுவை பதிவேட்டின் விவரங்கள் அனைத்தும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டுமெனவும், இது தொடர்பாக இவ்வலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட சான்றினை பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும் எனவும், பார்வையில் கண்ட சுற்றறிக்கையின் மூலம் இத்துறை சார்நிலை அலுவலர்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

Verified RealEstate™

இதனைத் தொடர்ந்து, அறநிறுவனங்களில் குத்தகைதாரர் / வாடகை-தாரர்களால் செலுத்தப்படும் குத்தகை / வாடகை தொகைக்கு அச்சடித்த இரசீது வழங்கும் முறையினை 31.10.2021 முதல் ரத்து செய்து 01.11.2021 முதல் இணையதள வழியில் அந்தந்த அறநிறுவனங்களின் நிர்வாகத்திற்கு குத்தகை / வாடகையினை செலுத்தி இரசீதினை பதிவிறக்கம் செய்து கொள்ள ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் பார்வை 5-ல் கண்ட சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தப்-பட்டுள்ளது.

மேலும், அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கு எழுப்பப்படும் கேட்பினை முறையாக வசூல் செய்யவும், அதில் ஒளிவுமறைவு அற்ற வகையில் அமையும் வண்ணம் 08.10.2021 அன்று மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் திருக்கோயில் கேட்பு வசூல் நிலுவை பதிவேடு விவரம் கணினி மயமாக்கப்பட்டுள்ளதை துவக்கி வைக்கப்பட உள்ளது. இதன் மூலம் அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்களுக்கு குத்தகைதாரர்/வாடகைதாரர்களால் செலுத்த வேண்டிய குத்தகை/ வாடகை தொகையினை இணையதள வழியில் செலுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, இப்பொருண்மை தொடர்பாக உடனடியாக கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது

1) அந்தந்த அறநிறுவனங்களில் அறங்காவலர் / ஆய்வர் / செயல் அலுவலர் ஆகியோர்கள் கேட்பு, வசூல், நிலுவை தொடர்பான விவரங்களை கணினியில் பதிவேற்றம் செய்து 01.11.2021 முதல் கணினி மூலம் மட்டுமே செலுத்துச் சீட்டு (Receipt) வழங்கப்படுகிறதா என்பதை திருக்கோயில் வாரியாக தணிக்கை மேற்கொள்ள தங்களது கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து தணிக்கை பிரிவு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

Verified RealEstate™

2) அந்தந்த அறநிறுவனங்களில் அசையாச் சொத்துக்கள் குறித்த கேட்பு, வசூல், நிலுவை ஏதும் பதிவேற்றம் செய்யப்படாமல் திருக்கோயிலுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதனை ஆய்வு செய்து ஆய்வறிக்கை அளிக்கப்பட வேண்டும்.

3) அறநிறுவனங்களுக்குச் சொந்தமான Non-DCB இனங்களுக்கான தொகையினை கேட்பு வசூல் நிலுவை விவரங்களுடன் பதிவேற்றம் செய்யக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

4) சிறிய அளவிலானத் தொகை மற்றும் கணினி மூலம் வாடகை செலுத்த இயலாத வாடகைதாரர் / குத்தகைதாரர்கள் வழக்கம்போல் திருக்கோயில் அலுவலகத்தில் தொகையினை செலுத்த வரும்போது அத்தொகையை பெற்றுக் கொண்டதற்கு திருக்கோயில் நிர்வாகத்தால் கணினி மூலம் மட்டுமே ரசீது அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என பார்வை 5-ல் கண்ட சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை கண்காணித்திட வேண்டும்.

5) அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கான குத்தகை / வாடகை வசூல் செய்யப்பட்ட தொகையை உரிய நேரத்தில், உரிய தலைப்பில் வங்கியில் செலுத்தப்பட்டு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறியப்பட வேண்டும், இதில், காலதாமதமோ / தவறோ கண்டறியப்பட்டால் உடனுக்குடன் தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

6) அறநிறுவனங்களில்குத்தகைதாரர் / வாடகைதாரர்களால் செலுத்தப்படும் குத்தகை/ வாடகை தொகைக்கு அச்சடித்த இரசீது வழங்கும் முறையினை 31.10.2021 முதல் ரத்து செய்திட உத்தரவிடப்பட்டு-உள்ளதால் அன்றைய தேதியில் உபயோகப்படுத்தப்படாத ரசீது புத்தகங்கள் அனைத்தும் பட்டியலிடப்பட்டு தொடர்புடைய மண்டல / மாவட்ட அலுவலகத்தில் பராமரித்திட ஒப்படைக்கப்பட்ட விவரம் குறித்து பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

Verified @ RealEstate™

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்ட விவரங்கள் தொடர்பாக தணிக்கை பிரிவு மூலம் திருக்கோயில் வாரியாக ஆய்வு செய்யப்பட்ட அறிக்கையினை மண்டல வாரியாக தொகுத்து (Conscildated Report) வரும் 15.11.2021–க்குள் பெற்று ஆணையருக்கு 20.11.2021–க்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது.

ஓம்./ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப/

6.10.2021
கண்காணிப்பாளர்

இணைப்பு – சுற்றறிக்கை நகல்.

Verified RealEstate ™